(தமிழ்ப் பேச்சு - பிரிவு 5)

# மேற்குலகிலே சைவக்கோயில்கள்

நாம் எங்கு வேண்டுமானாலும் வாழலாம். மரியாதையைக் காப்பாற்றும் விதத்திலே எந்தத் தொழிலையும் பார்க்கலாம். யாரையென்றாலும் எம் சுற்றமாகக் கொள்ளலாம். இதனை நன்கு உணர்ந்தே "யாதும் ஊரே! யாவரும் கேளீர்" என்று அன்றே பாடிவைத்தான் புலவன் கணிகன் பூங்குன்றனார். ஆனால் அவன் பாடிவைத்த அடுத்த வரிகள் "தீதும் நன்றும் பிறர்தர வாரா". அதனைப் பலரும் "பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. காரணம், தத்துவங்களை உள்ளபடி விளங்கி அதனை ஏற்று வாழ்பவர் யார்? நூற்றில் ஒருவராவது உள்ளாரா என்றால், இல்லை என்றே பதில்வரும். காரணம், எமது பலவீனப்பட்ட தன்மை! ஆன்மா இருக்கின்றதே எதனையும் தானாக அறியாதது. அறிவித்தால் அறியவல்லது. அறிவித்தால் அறியவல்லதாக இருந்தாலும் அதனை நன்கு ணர்ந்து நன்முறையிலே செயற்படுமா என்றால், அதற்கும் இல்லை என்றே பதில் வரும். இதுவே ஆன்மாவின் மிகப் பெரிய பலவீனம். இதனாலேதான் அன்புக்குக் கட்டுப்படுகின்ற பலவீனத்தையும் சேர்த்து அருளினான் இறைவன். இந்த நல்ல பலவீனமே லயப்படுகின்ற தன்மை. ஆன்மா ஆண்டவனோடு லயப்படுவதற்கு ஏற்ற இடம், உரிய இடமே ஆலயம்!

சிலர் நினைக்கக்கூடும் ஆண்டவனை - எங்கிருந்தும் கும்பிடலாந்தானே, தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் அவன். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற இருக்கின்ற பரமசிவன் அவன். அவனை எங்கிருந்தும் கும்பிடலாம். ஆனால், ஆன்மாக்களாகிய நாம் அதற்குத் தயாரா என்பதே கேள்வி! சரண கமலா லயத்தை அரைநிமிட நேரமட்டில்(த்) தவமுறை தியானம் வைக்க அறியாதவர்கள் தாமே யாம்! ஆலயத்தில் என்றால் நாம் சற்று முயன்றால் எப்போதாவது ஒரு நாளென்றாலும் அரை நிமிடம் அவனைத் தியானிக்க ஒரு வாய்ப்புண்டு. அதனாலேயே ஒளவைப்பாட்டியும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று கொன்றை வேந்தனில் பாடிவைத்துள்ளார். சரிகைத் தொண்டு மூலம் இறைவனை அடைந்த திருநாவுக்கரசரும் 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா, நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு' என்று எம் நெஞ்சத்திற்கு உணர்த்துகின்றார். இவை எல்லாவற்றிலும் இருந்து ஆலய வழிபாடு அவசியமானது என்பது உணரப்படுகின்றது. ஆகவே நாம் கிழக்கிலே வாழ்ந்தாலென்ன, மேற்கிலே வாழ்ந்தாலென்ன ஆலயம் அவசியமானது. எனவே, புலம்பெயர்ந்து மேற்குலகம் வந்த நாம் சைவக் கோயில்களைக் கட்டத்தான் வேண்டும். ஆனால்... எப்படிக் கட்ட வேண்டும், எவரெவர் கட்ட வேண்டும், கட்டிய கோயில்களை எப்படி நடாத்த வேண்டும், எவரெவர் நடாத்த வேண்டும் என்பவையே இங்கு முக்கியமான கேள்வி களாகும். எப்படி நடாத்த வேண்டும் என்பதுவே இவற்றுள்ளே தலையாய கேள்வியாகும். எப்படி நடாத்துகின்றோம் என்பதிலே தான் இன்று உருவாகிய சைவக் கோயில்களின் எதிர்காலம் தங்கியிருக்கும். இன்று நடத்தப்படுகின்ற விதத்தைப் பார்த்தே, சைவத்தின் மீதும் கோயில்கள் மீதும் எமக்கு உள்ள நம்பிக்கை வளரமுடியும். வளரமுடியும் என்றவுடன் மகிழ்வடைய வேண்டாம். வளரக்கூடிய எதுவும் தேயவும் கூடும். எல்லாம் இன்றைய நடத்துனராகவிருக்கும் பெரியவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

மேற்குலகின் அந்நியச் சூழல், அந்நியக் கலாசாரம், ஏனைய சமயங்களின் இலகுவான இணைப்புக்கள், இன்னோரன்ன பலவற்றினோடு நாம் ஈடுகொடுத்துச் சைவராக வாழ்வதற்கு வெறும் சடங்குகளும் திருவிழாக்களும் உதவிசெய்ய மாட்டா. சைவத்தின் அடிப்படை உண்மைகள் விளங்கப்படுத்தப்பட வேண்டும். உண்மைச் சமயம் உணரப்பட வேண்டும். உள்ளத்தில் உணரப்பட்ட சமயமே உலகத்தில் நிலைக்கும். இந்நிலை நிச்சயமாக சடங்குகள் மூலம் எய்தப்படமாட்டா.

மேற்குலகிலே, குறிப்பாக இலண்டனிலே, இன்று சைவக்கோயில்களை எங்கு அமைக்கின்றோம் என்பதனையும், அந்த நிலை ஏன் ஏற்பட்டதென்பதையும், இரண்டு நிமிடம் கண்ணை மூடிச் சிந்தித்துப் பார்த்தாற் புரிந்து கொள்வதொன்றும் சிரமமானது அல்ல. இந்நிலை சைவத்தின் பக்கத்திற்குச் சுழன்றுவிடக் கூடாது என்றால், மேற்குலகிலே சைவப் பெற்றோரும் சைவக் கோயில்களும் செய்வதற்கு எவ்வளவோ காரியங்கள் உள்ளன. இடையே ஒரு சந்ததியைத் தவறவிட்டு விட்டு, அதற்கு அடுத்த சந்ததி அதனை நிலைநாட்டும் என்பது தப்புக் கணக்கு. காரணம் நாம் வாழ்வது எமது சொந்த மண்ணில் அல்ல. இங்கு திருவிழாக்களின் போது மாவிலைத் தோரணம் தொடக்கம், குருக்கள் ஐயா, நாதஸ்வரத் தவில் வித்துவான்கள் ஈறாக எத்தனையோ பொருட்களையும் புலமை மிக்க மனிதர்களையும் அங்கிருந்து அழைக்கின்றோம். இது ஆகாத ஒன்று அல்ல. ஆனால், நாளைக்கு இதே பாணியிலே பக்தர்கள் குழாம் என்று பெயர் சூட்டி, அங்கிருந்து அழைக்கவேண்டிய ஒரு நிலை ஏற்படக்கூடாது என்பதே பக்தர்களின் ஆதங்கம்.

சைவம் அழிந்துவிடும் என்று ஒரு வாதத்திற்கு ஏற்றுக்கொண்டோமானால், அதனை என்மனம் ஏற்கவில்லை. சைவம் இவ்வுலகைவிட்டு ஒருபோதும் அழியாது. ஆனால் நாம் வாழும், எமது சந்ததி வாழ இருக்கும் இடம் மேற்குலகம். சைவம் வாழுமா என்றால்? அந்தக் கேள்விக்குரிய பதில் இன்றைய பெற்றோரின் கைகளிலும், இங்கு இக்கோயில்களை நடாத்திக் கொண்டிருப்பவர்களின் கைகளிலுமேயே தங்கியுள்ளன. இவர்கள் தங்களது பணிகளை சிறப்புற செய்ய தவறி, கதைத்து காலத்தை போக்கி சைவம் அழியாது என கூறினார்கள் என்றால் அது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதைப் போன்றதே.

பிள்ளைகளைப் பெறுவது என்பது கெட்டித்தனமல்ல. அவர்களை நல்ல முறையிலே வளர்க்கவும் வேண்டும். அதுவே கெட்டித்தனம் மிக்க, சிரமம் மிக்க, செயல் ஆகும். இதனை இங்கிருக்கும் யாராவது இல்லையென்பீர்களா? இல்லை!. அதுபோலவே கோயில்களைக் கட்டுவது ஒன்றும் சிரமமானது அல்ல. அவற்றினூடாகக் கடமையை நிறைவேற்றுவதுதான் சிரமமான செயல்! எனவே, ஆண்டிற்கு நான்கு ஐந்து என, இன்று மேற்குலகிலே எழுந்துவரும் சைவக்கோயில்கள் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் செயற்கரிய செயலைச் செய்வதிலே தமது நேரத்தையும் கோயிற் பணத்தையும் செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

செயற்கரிய செய்வார் பெரியர். நாம் அப் பெரியோரையே எதிர்பார்க்கின்றோம். மேற்குலகிலும் சைவக் கோயில்களைக் கட்டுவோம். அதனினும் மேலாகக் கட்டியவற்றை நல்ல முறையிலே நடாத்துவோம். யாவற்றிலும் மேலாக எம் சமய அறிவையும் அதற்கு இன்றியமையாத தமிழ் அறிவையும் சைவக் கோயில்களினூடாக வளர்த்தெடுப்போம்.

"மேன்மைகொள் சைவநீதி! விளங்குக உலகமெல்லாம்!"

நன்றி! வணக்கம்!